# மரணத்தின் வாசலில் வாழ்வின் குரல்...

**மமியா அபு-ஜமால்**



இராணுவத்தின் கட்டளைத் தளபதி என்னும் தனது தகைமையினால் ஈராக்கின் எதிர்ப்பு அதிகரிக்கும் பகுதிகளுக்கு மேலதிக துருப்புகளை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முடிவெடுத்துள்ளார். அதற்குச் சிறிது முன்புதான் அமெரிக்காவின் யுத்தத்தின் குறியீடாக விளங்கியவரும் அமெரிக்க இராணுவத்தால் வீழ்த்தப்பட்ட ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன், தனது வாஷிங்டனிலுள்ள ஏகாதிபத்திய கொடை வழங்கிகளால் மன்னிப்பு மறுக்கப்பட்டு ஷியா மஹ்தி இராணுவத்தால் அவமானப்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

அவரது குற்றங்கள்?

தனது எதிரிகளான ஷியா முஸ்லிம்களை கொன்றதற்காகவோ அல்லது தனது நாட்டு மக்களை சித்திரவதை செய்ததமைக்காகவோ நிச்சயமாக தூக்கிலிடப்படவில்லை. நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற பின்னர், அமெரிக்காவில் இருந்து அனுப்பப்பட்டவர்கள் அவருடன் குதூகலமாக கை குலுக்கி, கட்டியணைத்து ஜோக்கடித்தனர். பாக்தாத்தில் மிக விரும்பப்பட்ட இவ்விருந்தினர்களில் ரோனால்ட் றீகனின் அரசாங்கத்தில் இருந்த (அங்கம் வகித்த) டோனால்ட் ரம்ஸ்வெல்ட்டும் இருந்தார். இவர் சதாம் ஹுசைனுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அமெரிக்கத் தயாரிப்புகளான போர் ஆயுதங்கள் முதல்

# 25 வருடங்கள் சிறையில்...

**ராகவன் (பேர்லின்)**

ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட மக்களின் உழைப்பில் செழிப்புற்ற வெள்ளை அமெரிக்காவானது, அவர்தம் சந்ததியை, தொடர்ந்து சமூக வளர்ச்சியினின்று தடுத்தும், இனவெறிப் பாகுபாட்டுடனும் நடாத்தியது. இதற்கெதிரான ஆபிரிக்க அமெரிக்கர்களின் (ஆபிரிக்காவிலிருந்து கொண்டுசெல்லப்பட்டோரின் சந்ததியினர்) மனித உரிமை இயக்கங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலேயே செயற்பட்டு வந்தாலும், அறுபதுகளின் ஆரம்பத்தில்தான் முனைப்புப் பெற்றது. இனவெறி, சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கெதிராக 'கறுப்பர்களை' பெருமளவில் ஒன்று திரட்டி மக்கள் போராட்டமாக மாற்றுவதற்கு மார்ட்டின் லூதர் கிங்கின் மனித உரிமைகள் அமைப்பும், எலிஜா மொகமட்டின் இஸ்லாம் தேசமும் (Nation of Islam) முக்கிய பங்காற்றியுள்ளன. எலிஜா மொகமட்டின் அமைப்பில்தான் மல்கம் எக்ஸ் இணைந்து செயற்பட்டார். அவரது தீவிர கருத்துப் பிரசாரத் திறமையால் பல இளைஞர்கள் கவரப்பட்டனர். அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரின் கருத்துக்களால் உந்தப்பட்டவர்கள் கரும் சிறுத்தைகள் (Black Panthers) என்னும் அமைப்பை உருவாக்கினர். இது இடதுசாரி கொள்கைகளுடனான தற்பாதுகாப்புப் போராட்ட அமைப்பாகும். பொலிஸாரின் மோசமான வன்முறைகள், நீதியமைப்பு, பாடசாலை மற்றும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிலவிய இனவெறி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வறுமை என்பவற்றால் 'கறுப்பர்கள்' மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.

அக்கால கட்டத்தில் உலகெங்கும் தனது நலனுக்கு எதிரான கம்யூனிஸ்ட்டுகள், பல 'மூன்றாம் உலக நாடுகள்' மீது தனது நேரடி மற்றும் மறைமுகப் போரை அமெரிக்கா நடாத்திக் கொண்டிருந்தது. உள்நாட்டில்




இது எம் காலத்தில் அறத்தைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு குறியீடு. எந்தத் தேசமானது சதாம் ஹுசைனை ஈரானுக்கெதிரான யுத்தத்தைத் தூண்டியதோ, அயல்நாட்டுக்கெதிரான கொடிய யுத்தத்தைப் புரிவதற்கு தொடர்ந்த ஆயுதத் தேவையை பூர்த்தி செய்ததுவோ, பெரும்பான்மை ஷியா மக்களை தனது அச்சம் தரும்அதிகாரத்தால் ஒடுக்கும் போது கண்டுகொள்ளாமல் இருந்ததுவோ அதுவே அவருக்கு மரண தண்டனையை விதித்தது.(அவரிடமிருந்து எதிர்பார்த்ததையெல்லாம் அவர் செய்த போதும்)

1982இல் சதாமால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறலுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்படியாயின் ஏன் அமெரிக்கா 1984இல் ஈராக்குடன் இராஜ தந்திர ஒப்பந்தங்களைச் செய்தது. 2003ம் ஆண்டு நியூயோர்க்கில் 'ஈராக் யுத்தத்தின் பின்னணியில்' (Behind the Iraq War) எனும் குறிப்பிடத்தக்க நூல் வெளியாகியது. இந்திய செயற்பாட்டாளர் குழுவான RUPE (Research Unit for Political Economy) வெளியிட்ட நூல். ஈரான் துருப்புக்

பேரழிவு ஆயுதங்கள்வரை அனுப்பி வைத்தார்.

சதாம் ஹுசைன் மனிதத்திற்கெதிரான குற்றச் செயல்களை ஒத்துக் கொள்வாராயின், அதற்கு உதவி செய்தும் தூண்டுதலாகவும் இருந்த அமெரிக்கர்களின் நிலை என்ன? ஈராக்கை ஆயுதபலமாக்கியவர்களின், இவ்வாயுத வியாபாரம் மூலம் மிகப் பெரிய இலாபமீட்டிய முக்கியமாக மேற்குலகின் ஆயுதக் கொம்பனிகளை என்ன செய்வது?

பல அமைப்புக்களை, தனி மனிதர்களை கண்காணித்தும், கைது செய்தும், இரும்புக்கரம் கொண்டு

அழித்தும் கொண்டிருந்த காலமது.

* * * *



1954ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி, பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள பிலடெல்ஃபியாவில் பிறந்த வெஸ்லி குக் (மமியா அபு-ஜமால்). 'கறுப்பர்களுக்கும்' பொருளாதாரநிலையில் பின்தள்ளப்பட்டோருக்குமான குடியிருப்பொன்றில் வாழ்ந்து வந்தார். தனது 15வது வயதில் பிலடெல்ஃபியாவின் கரும்சிறுத்தைகள் (Black Panthers) அமைப்பில் இணைந்து உதவி பத்திரிகை பேச்சாளராக மாறினார். எழுபதுகளின் ஆரம்பங்களில் ஆபிரிக்க அடையாளம், இயந்திர மயமாதலுக்கு எதிர்ப்பு, இயற்கையுடன் வாழ்தல், பொலிஸ் வன்முறைக்கு எதிர்ப்பு என்று தொடங்கப்பட்ட MOVE என்னும் அமைப்புடனும் இணைந்து செயற்பட்டார். பிலடெல்ஃபியா ஊடகவியலாளர் கூட்டமைப்பான Association of Black Journalistsஇன் தலைவராகவும் இருந்தார். கல்லூரியில் ஆபிரிக்கக் கலாச்சாரம் படிக்கும்போது வகுப்பறைப் பெயராக மமியா அபு - ஜமால் என்னும் பெயரைத் தெரிவு செய்தார். ஊடகவியலாளராகவும், அரசி



களுக்கெதிராக ஈராக் இராணுவம்இரசாயன ஆயுதங்கள் பாவித்ததை ஐ.நா. குழுவானது உறுதிப்படுத்தியிருந்தும், அமெரிக்கா இதுபற்றி அறிந்திருந்தும் ஈராக்குடனான இராஜதந்திர உறவுகள் மீண்டும் உருவாக்கப்பட்டதைக் கூறுகிறது. உண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈரானிய இராணுவத்திற்கெதிராக இரசாயன வாயு (நச்சுவாயு) எதிர்த்துத் தீர்மானம் கொண்டு வருவதை 1986இல் அமெரிக்காவானது தனது வீட்டோ அதிகாரத்தால் தடுத்திருந்தது.

ஈரானிற்கெதிரான யுத்தத்தில் ஈராக்கிற்கு ஆயுத விற்பனையானது எவ்வாறு நல்ல வியாபாரமாக இருந்ததென்பதை RUPE எழுதுகிறது. "அது ஒரு உற்சாகமான வியாபாரம். அது ஈராக்கையே அழித்தது. இங்கிலாந்தும் பிரான்சும் அதன் முக்கிய ஆயுத விநியோகஸ்தர்கள். போர்த்துக்கல், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரேனியத்தில் இருந்து ஜேர்மனிய உதவியுடன் ஈராக்கானது செறிவூட்டிய யூரேனியத்தைப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய அமெரிக்க குடியரசானது அதிகரித்து வரும் யுத்த செலவுகளை ஈடு செய்ய சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளில் இருந்து பெரிய ளவில் கடனை ஈராக் பெற்றுக்கொள்ள உதவியது. அத்து டன் அமெரிக்காவானது பூச்சி நாசினி தெளிக்கும் ஹெலிகொப்டர்களையும் வழங்கியது. (இதுவே 1988இல் நச்சு வாயுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது) Dow Chemicals கம்பனியால் வழங்கப்பட்ட இரசாயனம் பின் மனிதர்களுக்கு எதிராகப் பயன்படுத் தப்பட்டது. (1986இல்) அமெரிக்க விமானப் படை யினரால் ஈராக் விமானிகளுக்கு பயிற்சி,

---

யல் செயற்பாட்டாளராகவும் இயங்கி வந்த இவர் தனது 25வது வயதில் உள்ளூர் வானொலியொன்றிலும் பணியாற்றினார். இவரது திறமை, குரல், முயற்சி என்பவற்றால் விரைவில் நன்கு அறியப்படலானார்.

குடும்பத்திற்காக பல்வேறு பகுதிநேர வேலைகளையும் செய்து வந்த இவர் டாக்சி ஓட்டும் போது 1981ம் ஆண்டின் இறுதிப் பகுதியின் ஒரு அதிகாலையில் கைது செய்யப்பட்டு கொலைக்குற்றம் சுமத்தப்பட்டார். இவரது தம்பி வெளிச்சம் இல்லாமல் பிழையான வீதியால் கார் ஓட்டியபோது பொலிஸார் மறித்தாகவும் அந்நேரத்தில் எதேச்சையாக அந்த வீதியால் டாக்சியில் வந்த அபு - ஜமால் பிரச்சினைப் பட்டதாகவும், அப்போது பொல்க்னெர் (Faulkner) எனும் பெயருடைய பொலிஸை அவர் சுட்டபோது போலிஸும் திருப்பிச் சுட்டதாகக் கூறப்பட்டது. இதில் அந்த பொலிஸ்காரர் இறந்து விடுகிறார். காயத்துக்குள்ளாகி, மருத்துவமனையில் இருந்து பின் அபு - ஜமால் சிறையில் அடைக்கப்படுகிறார். அபு - ஜமால் நீதிமன்றத்தில் இல்லாமலேயே பெரும்பகுதி விசாரணை நடந்து 1982ம் ஆண்டு ஜீலை மாதம் 3ம் திகதி இவருக்கு மரண தண்டனை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தொடர் எதிர்ப்புகள், போராட்டங்கள் காரணமாக மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆனால், இன்று சர்வதேச ரீதியில் பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், தெரிதா போன்ற புத்திஜீவிகள் அபு - ஜமாலின் மரணதண்டனைக்கெதிராகவும் வழக்கு விசாரணை நடந்த முறைக்கு எதிராகவும் குரல் எழுப்புகின்றனர். உலகு தழுவிய எதிர்ப்புகளால் 1995ல் நிறைவேற்றப்பட இருந்த மரணதண்டனை இருமுறை ஒத்திவைக்கப்பட்டது. 2001ல் நீதிபதி ஜோன் (Yohn) இவர்மீதான மரணதண்டனையை திருப்பி எடுத்தாலும் வழக்கு மீள்விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்மீதான குற்றச்சாட்டு அப்படியே இருக்க அரசுதரப்பு சட்டத்தரணிகள் மரணதண்டனையை நிறைவேற்றும்படி விண்ணப்பித்துள்ளனர். எனவே அபு - ஜமால் மீதான மரணதண்டனை ஆபத்து தொடர்ந்தபடி உள்ளது.

ஐக்கிய அமெரிக்க குடியரசில் (USA) மரண தண்டனை வழங்குவதென்பது பெருமளவில் நடைமுறையில் உள்ளதொன்றாகும். 1936ல் கடைசியாக இருபதினாயிரம் பார்வையாளர்கள் மத்தியில் Rainey Bethea ஒரு 'கறுப்பர்' ஆபிரிக்க - அமெரிக்கர் தூக்கிலிடப்பட்டார். அதன் பின்னர் மக்கள் மத்தியில் தூக்கிலிடப்படுவதில்லை. இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் டெக்ஸ்சாஸ் மாநிலத்தின் கவர்னராக 5வருடங்கள் இருந்தபோது 150 ஆண்களினதும், 2 பெண்களினதும் மரண தண்டனைக்கு ஒப்புதல் வழங்கிச் சாதனை படைத்துள்ளார். அபு ஜமாலுக்கு மரண தண்டனை வழங்கிய நீதிபதி அல்பெர்ட் சபோ (Albert Sabo) தனது பதவிக் காலத்தில் 31 பேருக்கு மரணத்தைத் தீர்ப்பாக வழங்கியுள்ளார். இதில் இருவரே வெள்ளையர்கள். இன்று அமெரிக்காவின்



தொழில் நுட்ப ஏற்றுமதிக்கு அங்கீகாரம், அதன்மூலம் ஈராக்கிய ராக்கெட்டுகளின் தாக்கும் தூர அதிகரிப்பு (1988இல்). அது மட்டுமல்ல 1987ஒக்டோபரிலும் 1988 ஏப்ரலிலும் அமெரிக்க இராணுவமானது ஈரானியக் கப்பல்களையும் எண்ணெய்த் தளங்களையும் தாக்கியது"

இதனைச் சேர்ந்து உதவியதாகவோ தூண்டியதாகவோ எடுக்க முடியா தென்றால்!

ஆனால், எவர் முன்பு ஈராக்கை ஆயுதங் களால் நிறைத்தனரோ அவர்களே ஒன்று சேர்ந்து ஈராக்கை குற்றம் சுமத்தி, நாட்டை மூன்று துண்டுகளாக்க விரும்பினர். ஷியா முஸ்லிம் களுக்கு ஒன்று. குர்திய மக்களுக்கு ஒன்று. மற்றையது சுன்னி முஸ்லிம்களுக்கு. இதன்மூலம் ஈராக்கிய மக்களின் எதிர்காலம்பற்றியோ, பத்திரிகை களில் சொல்லப்பட்டதுபோல் 'ஜனநாயகத்தை நிலைநாட்டுதலை'ப் பற்றியோ கவலைப்படவில்லை. ஈராக்கிய மக்களின் விருப்பங்களிற்கு மதிப்பளிப்பதை விட அமெரிக்க மற்றும் மேற்குலகின் நலன்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஈரானுக்கு எதிரான யுத்தத்தில் இருபக்கமும் 10 இலட்சம் மக்கள்வரை அழிக்கப்பட்டபோது அமெரிக்கா சதாமுக்குப் பின்னால் நின்றது. இக்காலத்தில் ஈராக் கிய ஜனாதிபதி மிகப் பலமானவராகவும் தன்னை யாரும் தண்டிக்க முடியாதென்றும் நம்பிக்கை கொண் டார். இவ்விசேட சலுகையானது உலகில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மட்டும் உரித்தானது என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. ஒரு யுத்தத்தை இந்த வகையில் நடாத்துதற்கும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானோரின் சாவிற்கு காரண மாயிருப்பதற்கும், ஒரு அந்நிய நாட்டின்மேல் போர் தொடுப்பதற்குரிய போலிக் காரணங்களைக் கண்டு பிடிப்பதற்கும், அதன் குடிமக்களை சித்திரவதை செய்வதற்கும், பலுட்ஜா போன்ற நகரங்களை நிர்மூலமாக்குவதற்கும், நாட்டை மூன்று துண்டுகளாக்கி ஆபத்துக்குள்ளாக்குவதற்கும், சுற்றியுள்ள முழுப் பிரதேசத்தையே நிர்மூலமாக்கவும், இவை எல்லாவற்றையும் 'விடுதலை'யின் பெயரில் ஏற்பதற்கும் அமெரிக்காவால் மட்டுமே முடியும்

சிறைச்சாலைகளில் 3500 பேருக்குமேல் மரணதண் டனை விதிக்கப்பட்டோர் தமது நாட்களை எண்ணிய படியுள்ளனர். இவர்களில் 42 சதவீதமானோர் 'கறுப் பர்'களாவர். அமெரிக்க மொத்த சனத்தொகையில் இவர்கள் 12சதவீதம் மட்டுமேயுள்ளனர். இன்றைய இனவெறி, போலிஸ் வன்முறை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, வறுமை போன்றன நிலவுகிற அமெரிக்காவில் நீதியான விசாரணை என்பது சாத்தியமற்றதே. அரசு சார்பற்ற அமைப்புக்களும், ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவையும் உலக நாடுகளிலிருந்து மரணதண்டனை முறையை இல்லாது செய்யுமாறு தொடர்ந்து குரல் எழுப்புகின்றன. உலகில் இன்றும் 70 நாடுகளில் இம்முறை அமுலில் உள்ளது.

Hinter diesen Mauern (documentary film 1995/96) 'இந்தச் சுவர்களுக்கு பின்னால்' எனும் விவரணப் படமானது விசாரணையில் நடந்த முறையிலுள்ள முறைகேடுகளையும் அபு - ஜமாலின் நேர்காணலோடும் வெளிக்கொணர்ந்தது. ஆனால் இதை ஜேர்மனியில் ஒளிபரப்ப எந்தத் தொலைக்காட்சியும் முன்வரவில்லை. 2000ம் ஆண்டில்தான் 3sat எனும் தொலைக்காட்சி நிலையம் முதன்முதலில் இவ்விவரணப் படத்தை ஒளிபரப்பியது. பாரிஸ் நகரமானது 2003ல் அபு-ஜமாலுக்கு கௌரவப்பிரஜை எனும் பட்டம் வழங்கியது. அப்போது நடந்த வைபவத்தில் 1981இல் பிரான்சில் மரண தண்டனை முறை நிறுத்தப்பட்டதை மேயர் நினைவு கூர்ந்தார். 2006ல் பாரிஸின் அண்மைய நகரமான செ்ன்ற் டேனிஸ் (Saint Denis)ம் அவருக்கு கௌரவப் பிரஜை விருதைக் கொடுத்தது. அத்துடன் அங்கு கட்டப்பட்டு வரும், ஐரோப்பாவிலேயே பெரியதாக அமையவிருக்கும் மண்டேலா விளையாட் டரங்குக்கு செல்லும் பாதைக்கு அபு - ஜமாலின் பெயரைச் சூட்டிக் கௌரவித்துள்ளனர்.

சிறையிலிருந்தபடியே அபு - ஜமால் எழுதியவை We want Freedom: A Life in the Black Panther Party, Death Blossoms, All Things Censored, Faith of Our Fathers நூல்களாக வந்துள்ளன.



இன்று மமியா அபு - ஜமால் மீதான மரணதண் டனைக்கு எதிரான போராட்டமென்பது இனவெறிக்கு எதிரானதாக, இடதுசாரித் தன்மையுடைத்ததாக, உலகமயமாதலுக்கு எதிரானதாக, மரணதண்ட னைக்கு எதிரானதாக என்று பல்வேறுபட்ட பரிமாணங் களுடன் கூடிய ஒரு குறியீடாகி யுள்ளது.